அ.வ.எண் : 143/2017

தேதி : 03/01/2020

பெயர் : ராஜாராம்

நேரம் : பிற்பகல் 01.20 முதல் 01.35

<u>வா.த.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா சொத்தினை கிரயம் பெறுவதற்கு முன் வில்லங்கம் ஏதாவது பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தாவா சொத்தினை 1994 ம் ஆண்டில் கிரயம் பெற்றேன். கிரயம் பெறுவதற்கு முன்பாக சுமார் 15 ஆண்டுகளுக்கான வில்லங்க ஆவணங்களை பார்த்து கிரயம் பெற்றேன். வில்லங்க ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அது பற்றி நினைவிலில்லை. தாவா சொத்து குறித்து என் தம்பி தான் முன்னின்று வாங்கினார் அதனால் அது குறித்து விவரங்கள் அனைத்தும் என் தம்பி மோகன் என்பவருக்கு தான் தெரியும். என் தம்பியிடத்தில் உள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எங்கள் ஊரில் அசோகன் என்ற தலைவர் உள்ளார். நான் 2017 ம் ஆண்டில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எங்கள் ஊர் தலைவராக ஒரு அசோகன் என்பவர் இருந்தார் என்றால் தலைவராக இருந்தார் எந்த ஆண்டில் இருந்தார் என்ற விவரம் தெரியாது. அசோகன் என்பவரின் பெற்றோர்கள் பெயர் எனக்கு தெரியாது. ஏ13 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண் கடைசியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏ13 ஆவணத்திற்கு முன்பாக தாவா சொத்திற்கு வேறு வருவாய் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி நினைவிலில்லை. சுப்பிரமணி பெயரில் உள்ள பட்டாவை எனது பெயருக்கு எவ்வாறு மாற்றிக்கொண்டேன் என்றால் தானாக வருவாய் துறையை அனுகி மாற்றிக்கொண்டேன். மேற்படி சுப்பிரமணி பெயரிலுள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவிலில்லை.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).